**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 261** **நாள்: 02.07.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் சொத்து உரிமையாளர்களிடமிருந்து நிலுவை சொத்து வரி வசூலிப்பதற்கான சிறப்பு முகாம் நாளை 03.07.2026 முதல் 17.07.2026 காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெறுகிறது.**

பெருநகர சென்னை மாநகராட்சி பிரதான வரி வருவாயாக சொத்துவரி உள்ளது. இதன் மூலமே, சென்னை மாநகருக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்புகள், குப்பை திடக்கழிவுகள் அகற்றுதல், தெரு விளக்குகள், பூங்காக்கள் மற்றும் சாலைகள் பராமரித்தல், பொது சுகாதாரம் நோய்த்தடுப்புப் பணி போன்ற அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சொத்து உரிமையாளர்களிடமிருந்து நிலுவை சொத்துவரி வசூலிக்க பெருநகர சென்னை மாநகராட்சியால் சிறப்பு முகாம்கள் அனைத்து மண்டல அலுவலகங்கள் மற்றும் வார்டு அலுவலகங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு முகாம் நாளை 03.07.2026 முதல் 17.07.2026 வரை காலை 8.00 மணி முதல் மாலை 6,00 மணி வரை நடைபெறவுள்ளது. சொத்து உரிமையாளர்கள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி நிலுவை சொத்துவரியினை செலுத்தி, சட்ட விதிகளின்படி தனிவட்டி விதிப்பினைத் தவிர்க்குமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி சேவைப்பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கிடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**